**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

-----

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Sessions Case No. 18 of 2023**

**Deposition of witness for** : PW2

**Name** : **விஜயகுமார்**

**Father's Name** : **கிருஷ்ணன்**

**Village** : **வேலம்பட்டி**

**Taluk** : **போச்சம்பள்ளி**

**Calling** : **தனியார் வேலை**

**Age** : 42

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of July 2025.**

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**:

நான் தற்போது பெங்ளூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது தகப்பனார் ஆவார். 06.05.2022 ம் தேதி கொரோனா காலத்தில் நான் ஊருக்கு வந்திருந்தேன். வேலம்பட்டியில் எங்களுக்கு 1 ஏக்கர் 40 செண்டு இடம் உள்ளது. 06.05.2022 ம் தேதி காலை சுமார் 8 மணிக்கு எனது தகப்பனார் நிலத்தை சுற்றி பார்க்க சென்றார். அவ்போது பக்கத்து நிலத்தில் அஜித் என்பவர் டிராக்டரில் ஏறு ஓட்டி கொண்டு இருந்தார். அப்போது எனது தகப்பானர் அஜீத் இடம் எனது நிலைத்தையும் ஓட்டி கொடுத்துவிட்டு செல்லும்மாறு சொன்றார். 1/2 மணி நேரம் கழித்து எனது தகப்பனார் வீட்டிற்கு வந்தார். மீண்டும் எனது தகப்பனார் நிலத்திற்கு சென்றார். எ ன்

நிலத்தை ஓட்டவில்லை என்று அஜீத்திடம் கேட்டுள்ளார். அதற்கு அஜீத் பக்கத்து நிலத்துக்காரர் கருணாநிதி என்பவர் அவர் நிலத்தை ஓட்டினால் உனது டிராக்டரை பெட்ரோல் ஊத்தி கொளுத்திவிடுவேண் என்றும் அந்த வழியாக ஓட்டி செல்லமுடியாது என்றும் மிரட்டியதால் தனக்கு அச்சம் உள்ளது என்று சொல்லி ஓட்டாமல் டிராக்டர் எடுத்து சென்றுவிட்டார். எங்கள் கிணற்றில் இருந்த மோட்டார் தண்ணீர் பத்தவில்லை என்னை கீழே இறக்குவதற்காக மெக்கானிக் மாரியப்பன் மற்றும் முருகன் ஆகியோர் வந்து மோட்டாரை சரிசெய்து கொண்டு இருந்தார்கள் அப்போது நான் சுமார் 9 1/2 அல்லது 10 மணியளவில் எனது தகப்பனாரிடம் போன் செய்து ஏன் சாப்பிட வரவில்லை என கேட்டேன் அப்போது தான் அவர் நடந்த விவரத்தை என்னிடம் கூறினார். நான் சுமார் 11.30, 12 மணியளவில் எனது அப்பாவை அழைத்து வரலாம் என்று நிலத்திற்கு சென்றுகொண்டிருந்தேன். அப்போது போகும் வழியில் முனியம்மாள் வீட்டு அருகேயுள்ள 10 அடி ரோட்டில் நான் சென்றுகொண்டியிருந்தபோது முனியம்மாள் என்னை தடுத்து என்டா கண்டாரஓலிபையா, தேவிடியாபையா, பொரிக்கிபையா, ஊர் எல்லாம் போலம் நீ எப்படி போகலாம் என தடுத்து 6 பேரும் பிரச்சனை செய்தார்கள். பார்வதி கையால் எனது கண்ணத்தில் அறைந்தார். கருணாநிதி இரண்டு மகன்கள் வீட்டில் இருந்து வந்து இவன் உயிருடன் இருந்தால் தான் அந்த வழியாக வருவான் இவனை வெட்டுபா நான் பார்த்துக்கொள்கிறேன் என சொன்னார்கள். கருணாநிதி கொடுவாலால் வெட்டும்போது தலையில் இடது பக்கத்தில் வெட்டினார்என தனது தலையை காண்பிக்கிறார் அப்போது நான் கையில் தடுத்தபோது வலது கையில் எழும்புமுறிவு உட்காயம் ஏற்பட்டது. எனக்கு இரத்தம் அதிகமாக வெளியேறியது. நான் கீழே விழுந்துவிட்டேன். அதன் பிறகு பார்வதி கல்லால் இன்னும் சாகவில்லையா என சொல்லி அடித்தார். மற்றவர்கள் அணைவரும் என்னை காலல் எட்டிஎட்டி உதைத்தார்கள். நான் ஐயோ அம்மா என்று கத்தினேன். அது மெக்கானிக் முருகனுக்கு கேட்டுள்ளது. அப்போது எனது அப்பா ஓடி வந்தார் மாரியப்பன், முருகன் அப்பாபை தொடர்ந்து 10 அடி தூரத்தில் வந்தார்கள். அப்போது எனது அப்பா என் என்ன ஏது என்று சொல்லிக்கொண்டு ஓடி வந்தார். நான் செத்துவிட்டேன் என்று எதிரிகள் ஓடி விட்டார்கள். கருணாநிதி கத்தியை அவரே எடுத்து சென்றுவிட்டார். பின்பு எனது அப்பாவும் முருகனும் எனது தலையில் துணியை சுற்றினார் பின்பு எனது மனைவி விவரம் தெரிந்து வந்து அவரது சால் துணியும் சுற்றி என்னை வண்டியில் காவேரிபட்டினம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் அங்கு எனக்கு சுமார் 17 தையல்கள்

போட்டார்கள். இரத்தம் தொரர்ந்து வந்து கொண்டுயிருந்ததால் போதிய மருத்துவ வசதி அங்கு இல்லாதால் கிருஷ்ணகிரி மருத்துவமணைக்கு அழைத்து சென்றோம் அங்கு சிகிச்கை தமதம் ஆனதால் சம்மபவம் தெரிந்து வந்த எனது மாமா பெங்களுர் சென்ஜான் ஆஸ்பிட்டலுக்கு அழைத்து சென்றார்கள் அங்கு எனக்கு சிகிச்சை அளித்து Scan எடுத்தார்கள். மறுநாள் கலையில் டிஸ்சார்ஜ் செய்தார்கள் மீண்டும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன் அங்கு 7 ம் தேதிமுதல் 10ம் தேதிவரை சிசிச்சையில் இருந்தேன். எனக்கு தகபனார் காவேரிபட்டினம் மருத்துவமனை வரை வந்தார் அவருக்கு காயம் அதிகம் இல்லததால் வீட்டிற்கு வந்து பின்பு நாகரம்பட்டி காவல்நிலையத்தில் சென்று சுமார் 9.30 அல்லது 10 மணிக்கு புகார் கொடுத்தார். நாங்கள் சிகிச்சைக்காக வந்தபோது எதிரிகள் சென்று நிலத்தில் இருந்த வேளிகளை உடைத்துவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் கொடுவாலால் தான் என்னை கருணாநிதி வெட்டினார். மேற்படி கொடுவாள் சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

எனக்கு உடல் முழுவதும் இரத்தம் இருந்தது. உடைகள் முழுவதும் இரத்தம் இருந்தது இது குறித்து நான் காவல்துறையினரிடம் சொன்னேன் என்றால் சரிதான். சம்பவம் 11.30 முதல் 12 மணிவரை நடந்ததாக தான் மருத்துவரிடம் சொல்லியுள்ளேன். சம்பவ இடம் மாரிசெட்டிஅள்ளி செல்லும் மண்பாதை என்றால் சரிதான். 10 அடி ரோடு ஆகும். மேற்படி சம்பவ இடத்தை மருத்துவர், போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். காலால் உதைத்து, கையால் அடித்து மற்றும் கல்லால் அடித்தது குறித்தும் மருத்துவரிடம் சொன்னேன் என்றால் சொன்னேன். எத்தனை போர் தாக்கியதாக சொன்னேன் என்றால் இங்கு நிற்கும் 6 போர் தாக்கியதாக சொன்னேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் வழிபிரச்சனை உள்ளது என்றால் சரிதான். 15 வருடமாக உள்ளது. இது சம்மந்தமாக சிவில் வழக்கு எதும் இல்லை என்றால் சரிதான். எங்களுடைய இடத்தில் அவர்கள் செல்லவேண்டும் என்றாலும் அவர்கள் இடத்தில் நாங்கள் செல்லவேண்டும் என்றாலும் சரிதான். சாட்சி தற்போது எங்களுடை வழியில் அவர்கள் செல்லாம் ஆனால் அவர்கள் வழியில் நாங்கள் செல்வதில்லை என மாற்றி கூறுகிறார். அவர்களுடை இடத்தில் வண்டி பாதையும் கால்வாயும் அமைக்கவேண்டும் என்பதற்காக தான் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பயன் படுத்தியதாக கூறும் கத்தி, கல் மற்றும் துணிகளை போலீசார் கைபற்றினார்கள் என்றால் கொடுவாளை மற்றும்

கைபற்றினார்கள். கொடுவாலில் இரத்த கரை இருந்ததா என்றால் இருந்தது. நான் வெளியில் கொடுவாளை வாங்கி விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. போலீசார் கிருஷ்ணகிரியில் என்னை விசாரித்தார்கள் அவ்வாறு விசாரிக்கும் போது துணியில் இரத்த படிந்த விவரம் சொன்னேன். சம்பவயிடத்தில் இரத்தம் இருந்தது அதை போலீசார் பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். சம்பவ இடத்தில் இருந்து இரத்தம் படிந்த மண்ணை எடுத்து சென்றார்களா என்றால் எடுத்து சென்றார்கள். எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கும் இந்த நீதிமன்றத்தில் தான் நடக்கிறது என்றால் சரிதான். பெங்ளூரில் எப்போதில் இருந்து வேலை செய்கிறேன் என்றால் 2014 லில் இருந்து வேலை செய்துவருகிறேன். சம்பவத்திற்கு முன்பும் பின்பும் எவ்வளவு நாட்கள் நான் வீட்டில் இருந்தேன் என்றால் கொரோனா காலத்தில் 1 1/2 வருடம் வீட்டில் இருந்தேன் ஆனால் அது எப்போது என்று குறிப்பிட்டுசொல்ல முடியவில்லை மேற்படி விவரத்தை போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. சாட்சி 2020 மத்தியில் இருந்து சம்பவம் நடந்து 3 மாதம் வரை வீட்டில் இருந்தேன். பின்பு வேலைக்கு சென்றுவிட்டேன். அஜீத்திடம் நான் எதும் பேசவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நடந்ததை எனது தகப்பனார் சொன்னார். முருகன் மாரியப்பன் ஆகியோர் அவ்வபோது எங்கள் நிலத்திற்கு வந்து செல்வார்கள் என்றால் சரியல்ல. வேலை இருந்தால் மட்டும் வருவார்கள். முனியம்மாள் தடுத்ததாக கூறுவதும் அடித்ததாக கூறுவதும் வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆறு பேரும் என்னிடம் பிரச்சனை செய்வதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. பார்வதி கையால் என்னை கண்ணத்தில் அறைந்ததாக செல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவரிடம் சொன்ன சங்கதிகளுக்கும் தற்போது சாட்சியம் அளிக்கும் சங்கதிகளுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. கருணநிதி மகன் கத்தி எடுத்து கொடுத்து வெட்ட சொன்னதாக கூறுவது வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. மருத்துவரிடம் நான் நல்லநிலையில் தான் சங்கதிகள் சொன்னேன். எதிரிகள் கல்லாலும், காலாலும் மாறிமாறி அடித்ததாக கூறுவது வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 20 கல் உடைத்தது பற்றி போலீசார்கள் வந்து விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள் அப்போது நான் இல்லை. MRI scan, CT scan,. X -ray அகியவற்றை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை அவர்கள் தான் பெற்றுக்கொள்ளவேண்டும். நான் தள்ளு முள்ளு ஏற்படும் போது எனது ஆட்கள் தள்ளி அங்கிருந்த கல்லி விழுந்தால் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

சம்பவத்தின்போது நான் மட்டும் இருந்தேன். 2, 3 நிமிடத்தில் எனது தகப்பனார் வந்துவிட்டார். மருத்துவரிடம் சம்பவம் 11 மணியில் இருந்து 12 மணிவரை நடந்ததாக சொன்னேன். நான் காவல்துறை அதிகாரி உதவியுடன் வழக்கு ஜோடனை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் மீது கொடுத்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.